* 118. **வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு மருத்துவத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு நகரில் பாதாள சாக்கடை திட்டம் அமுல்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சு. துரைசாமி : ஈரோடு நகரில் விரைவில் பாதாள சாக்கடைத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் நகராட்சி மன்றத்திற்கு ஏதாவது ஆலோசனை கூறுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அரசாங்கம் ஆலோசனை கூறுவதில்லை. நகர மன்றம் கோரிக்கை சமர்ப்பிக்க வேண்டும். அப்படிக் கோரிக்கை சமர்ப்பிக்கும்போது, உரிய முறையில் கவனிக்கப்படும்.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : திருப்பூர் சட்டசபை மெம்பர் எல்லா முனிசிபாலிடிகளுக்காகவும் வழக்குப் போடுகிறாரே, அதற்கு என்ன காரணம் ? (சிரிப்பு).

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அது அவர்களுக்குள்ள அக்கறையைக் காட்டுகிறது. (சிரிப்பு).

மீன் பாசி ஏலம்

* 119 **வினா—திரு. வை. சுவாமிநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பஞ்சாயத்து யூனியன்களில் சிறுப்பாசன குளங்களில் உள்ள மீன் பாசி ஏல உரிமையை பஞ்சாயத்துக்களுக்கு விட அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஊராட்சிகளிடம் நிலைத்துள்ள பொது நீர் நிலைகளிலும், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 85 (1) பிரிவின் கீழ், ஊராட்சிகளிடம் நிலைத்துள்ளவையும், ஊராட்சிகளினால் உண்மையில் பேணிவரப்படுபவையுமான பாசன வாயில்களிலும், ஊராட்சிகளுக்குத் தற்போது பாசிக்குத்தகை உரிமை உண்டு. பிற பாசன வாயில்களில் ஊராட்சிகளுக்கு பாசிக்குத்தகை உரிமை இல்லை. ஊராட்சிகளிடம் நிலைபெறாத அல்லது ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்படாத சிறு பாசன வாயில்களின் பாசிக்குத்தகை உரிமைகளை மாற்றும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : ஏரிகளில் இருக்கும் பாசிகளை இப்பொழுது ஏலம் போடுகிறார்கள். ஏலம் எடுத்தவர்கள்தான் அதை எடுக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஏலம் எடுக்க முடியாத நிலையில் உள்ளவர்கள் அதை எடுப்பது இல்லை. ஆனால், வருஷா வருஷம் அந்த ஏரிகளில் உள்ள மண்ணைத் தூறு வாறும் அளவுக்கு, வண்டல் என்ற முறையில் எடுத்து விடுவார்களானால், அது சர்க்காருக்கு லாபகரமாக இருக்கும். ஏலம் போட்டு விடுவதால், பணம் வாங்கினவர்கள் தான் வண்டல் மண்ணை எடுக்க வேண்டும் என்ற முறை இருப்பதால், வண்டல் மண் எடுக்கப்பட முடியாமல், ஏரிகள் தூர்ந்து விடுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதைப்பற்றி மறுபரிசீலனை செய்ய வழிவகை உண்டா ?